## தலைப்பு 110- நீதி அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதிஅமைச்சின்2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுஅதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிஅமைச்சின்நிதிக்கூற்றுக்கள் தொடர்பானஎனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின்வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021ஆகஸ்ட் 20ஆந்திகதிகணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து,நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனைபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும்மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன.பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபார்சுகள் அமுல்படுத்தப்படவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1.6.2 | 1998 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்படாத ரூபா 4,809,450 தொகையான கட்டுநிதி மீதியானது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதிச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | தீர்த்துவைக்கப்படாத ரூபா 4,809,450 தொகையான கட்டுநிதி மீதியானது கட்டுநிதிக் கணக்கில் காட்டப்படுதல் வேண்டும். |
| 1.6.3 | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கணக்கும் அதன் ஒதுக்க கணக்கும் ரூபா 72,419,848 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | முறைமையிலுள்ள குறைபாட்டின் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 72,419,848 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இந்த ஆண்டிற்குரிய இறுதிக் கணக்கினைத் தயாரிக்கும் போது இந்த வித்தியாசத்தினைச் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதியைக் காட்டுதல் வேண்டும். |
| (ஆ) நிதியற்ற சொத்துக்களின் முன்னைய ஆண்டு இறுதி மீதியை மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக எடுக்கும் போது ரூபா 4,994,826,477 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | முறைமையிலுள்ள குறைபாட்டின் காரணமாக CIGAZ INTERFACE இல் சொத்துக்களின் பெறுமதி வித்தியாசமடைந்துள்ளதுடன் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் அதனை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அத் திணைக்களத்தால் தெரியப் படுத்தப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு செய்த நிதிக் கூற்றுக்களின் இறுதி மீதியானது மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான தனித்தனி கடன் மீதிப் பெறுமதிக்கும் அங்கத்தவர் கடன் பதிவேட்டுக்குமிடையே 19 கடன் மீதிகளில் ரூபா 616,127 தொகையான வித்தியாசமானது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த உத்தியோகத்தரின் கடன் மீதிகளை தனித்தனி கடன் பதிவேட்டில் பதியும் போது தவறுதலாக தவணைப் பணம் விடுபட்டுள்ளதுடன் தற்பொழுது அத்தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கத்தவர் கடன் பதிவேட்டிலுள்ள மீதியினை சரியாக தனித்தனி கடன் மீதிகளின் பட்டியலில் பதிதல் வேண்டும். |

### 1.6.3 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பிடித்து வைத்தல் வைப்புக்களின் பெறுமதியானது திறைசேரி மற்றும் திணைக்கள ஏடுகளுக்கும் வைப்புக் கணக்குகள் தொடர்பான கூற்றுக்குமிடையேயான வித்தியாசமானது ரூபா 1,608,554 ஆக இருந்ததனால் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்ற அறிக்கையிடல் தவறின் காரணமாக ரூபா 1,608,554 தொகை குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளின் பிரகாரமான பெறுமதியை கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.4 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஒரு கட்டிடத்தின் 2021ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 3,180,000 தொகையான வாடகையானது வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் கணக்கிற்கும் ஒதுக்கங்கள் கணக்கிற்கும் கணக்கீடு | 250/2016(i) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செலவு விடய இலக்கம் 1404 இன் கீழானதைத் தவிர்த்து ஏனைய செலவு விடயங்களின் கீழான | 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 250/2016(1) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தும் திறைசேரி ஏடுகளில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக நிதிக் கூற்றுக்களானது திறைசேரி ஏடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. | வாடகை முற்பணங்கள் ஒதுக்கக் கணக்கினை ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. விசேட அலகின் செலவுகளுக்காக 110-01-02-2509-21 ஆம் செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததனால் வாடகை முற்பணங்கள் ஒதுக்கக் கணக்கினை ஆரம்பிப்பதற்குமான இயலுமை இருக்கவில்லை. எனவே இப்பெறுமதியானது திறைசேரி கணக்குகள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் இடம்பெற்ற ஒரு விபத்து மற்றும் 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 06 விபத்துக்கள் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகன விபத்துக்கள் சம்பந்தமான நட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் நி.பி 104 இன் பிரகாரம் விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதனால் அந்த விசாரணைகள் முடிவடைந்து சிபார்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் ஏதாவது நட்டம் இருக்குமாயிருந்தால் பொறுப்பான நபரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கும் நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடக்கி அதனை நாளதுவரையாக்கி பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| திறைசேரியின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தீர்த்து வைக்கப்படாத ரூபா 628,650 கூட்டுமொத்தமான மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைக்கப்படவில்லை. | திறைசேரி கணனி அச்சுப் பிரதி இலக்கம் SA-92 ஆம் இலக்க படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்ட 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய இப்பெறுமதிகள் முறைமையிலுள்ள பிழைகளின் காரணமாக உள்ளடக்கப்பட்டிருந்தன. இப்பணமானது இன்னும் செலுத்த வேண்டிய பெறுமதி அல்ல. இப்பணமானது தவறுதலாக பொருட்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | திறைசேரி மீதிகள் சரி செய்யப்படுதல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 104(1) | 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இடம்பெற்ற 04 வாகன விபத்துக்களுக்குரிய நட்டங்கள் 2020 | இதில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் அந்த விசாரணைக் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | குழுக்களின் சிபார்சுகள் மற்றும் நி.பி 104(3) இன் பிரகாரமான இறுதி விசாரணை அறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட நட்டத்திற்கான பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்கள் எவரிடமிருந்தும் உரிய நட்டத்தை அறவீடு செய்தலினை மேற்கொள்வதற்கு உரிய முறைப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 109(1) மற்றும் (2) | 2012 இலிருந்து 2020 வரை 10 சந்தர்ப்பங்கள் போது இடம்பெற்றிருந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இவ்விபத்துக்கள் தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் அவ்விசாரணைக் குழுக்களின் சிபார்சு மற்றும் நி.பி 104(3) இன் பிரகாரம் இறுதி விசாரணை அறிக்கையின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்ற நட்டத்திற்காக பொறுப்பான நபர் எவரிடமிருந்தும் உரிய நட்டத்தை அறவீடு செய்வதற்கு உரிய முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் மற்றும் சேவையை விட்டுச் சென்ற 07 உத்தியோகத்தர்களின் ரூபா 624,602 மொத்த தொகையான கடன் மீதிகள் 06 ஆண்டுகளிலிருந்து 23 ஆண்டுகள் வரையான கால வீச்சில் அறவிடப்படாது காணப்பட்டது. | வேலையிலிருந்து இடை நிறுத்தி வைப்பதற்கு உட்பட்ட பீ.வீ.குணவர்த்தன- ரூபா 162,215 தொகைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜீ.ஏ.சீ கம ஆராச்சி - ரூபா 118,932 தொகையானது மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தும் சேவையை பொறுப்பேற்றுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதுள்ளதனால் தொடர்ந்தும் தேடிப்பார்த்து கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எம்.ஐ பெர்ணாந்து - ரூபா 49,150 சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. சேவையை கைவிட்டுச் சென்ற கே.எம்.எஸ்.பெர்ணாந்து - ரூபா 31,280 மற்றும் எச்.ஆர்.பெரேரோ - ரூபா 31,730 ஆகிய கடனாளிகளின் அல்லது பிணையாளர்களின் தகவல்கள் இல்லாமையின் காரணமாக நி.பி109 இன் கீழ் பதிவழிப்பதற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தும் தகவல்கள் போதியளவில் இல்லாமையினால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் எச்.எஸ்.சீ புஸ்பகுமார - ரூபா 121,392 மற்றும் எச்.ஏ.ஏ சாமர - ரூபா 117,003 என்பவற்றிற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. | நிலுவையான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் சமாதான தின செலவுகளைத் தீர்த்து வைப்பதற்காக UNDP நிறுவனத்திடமிருந்து 2017 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 1,316,041 பணத்தை உரிய குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்தாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2016 நவம்பர் சமாதான தினத்திற்காக செலவு செய்வதற்காக UNDP நிறுவனத்திடமிருந்து கிடைத்துள்ளது. அப்பணத்தை ஏனைய செயற்திட்டத்திற்காக பயன்படுத்துவதற்கு UNDP நிறுவனத்திடமிருந்து இணக்கப்பாடு விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அது பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கிடைத்த பணம் உரிய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளமைத்தலினை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தினால் திட்டமிடப்பட்டிருந்த பதுளை மாவட்டத்தின் ரூபா 3,005,961 பெறுமதியான 05 செயற்திட்டங்களும் மன்னார் மாவட்டத்தின் ரூபா 27.92 மில்லியன் பெறுமதியான 28 செயற்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதுளை மாவட்டத்தில் திட்டமிடப்பட்ட ஒரு வீதி அபிவிருத்தி செயற்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அமுல்படுத்துவதும், செயற்திட்டத்திற்காக வீதியின் இரு பக்கத்திலும் குடியிருப்பவர்கள் எதிர்ப்பினைக் காட்டியமையும், 2 செயற்திட்டங்களுக்காக திருத்தங்களை அங்கீகரித்து அமுல்படுத்துவதற்கு காலம் போதியதாக இல்லாமையும், ஒரு | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயற்திட்டமானது கமநல சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டினை வழங்குதல் தாமதமடைந்தமையும் என்பவற்றின் காரணமாக அமுல்படுத்தப்படவில்லை. மன்னார் மாவட்டத்தில் ரூபா 27.92 மில்லியன் தொகையான 28 செயற்திட்டங்களின் செலவு மதிப்பீட்டினைக் கோருதல் மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் இச்செயற்திட்டங்களை அங்கீகரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலாளர் பிரிவில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 10,200,000 தொகையான 12 அபிவிருத்தி ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை.<br>இச்செயற்திட்டங்களுக்காக ரூபா 3,188,533 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் நிதி செயலாற்றல் 10 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்கும் இடைப்பட்ட குறைந்த மட்டத்தில் இருந்தது. | செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட பாதகமான காலநிலை நிலைமையின் காரணமாக அதன் ஒரு வேலைப் பகுதியை மாத்திரம் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. | திட்டமிட்டவாறு செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம் அவசர பெறுகை சம்பந்தமான ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படாது ஒரு அலுவலகத்தை பேணுவதற்காக ஒரு கட்டிடத்தின் 2000 சதுர அடி அளவான தளமாடியைரூபா 265,000 மாதாந்த வாடகைக்கு 02 ஆண்டுகளுக்கு குத்தகை வாடகையின் அடிப்படையில் பெற்று மீளாய்வாண்டில் ஒரு ஆண்டு வாடகையாக ரூபா 3,180,000 தொகையும் பாதுகாப்பு வைப்பாக ரூபா 795,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | விசேட அலகினைத் தோற்றுவிப்பதற்காக அமைச்சு வளவில இடவசதிகள் இல்லாததனாலும் அதற்காக ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் பூரணப்படுத்த வேண்டியிருந்ததனாலும் அதன் மேற்பார்வை, ஒருங்கிணைப்பு,பின்தொடர் நடவடிக்கை என்பன செய்ய வேண்டியிருந்ததனால் அதனை அமைச்சின் அருகில் தோற்றுவிக்கும் தேவைப்பாடு இருந்ததுடன் தவஸ கட்டிடத்தின் கீழ் மாடி வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டது. எனினும், 2020 திசெம்பர் 01 ஆந் திகதி உயர் நீதிமன்றத்திற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டதன் காரணமாக அதற்கு இட வசதிகள் வழங்க வேண்டியிருந்ததனால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை தற்காலிகமாக தவஸ கட்டிடத்தில் ஸ்தாபித்து உயர் நீதிமன்றத்திற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் தேவையான இடவசதிகள் வழங்கப்பட்டதுடன் தற்பொழுது விசேட அலகினை அந்த இடத்தில் தோற்றுவிப்பதற்காக தேவையான நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படுதல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 17,250,000 மொத்த பெறுமதியான 5 வாகனங்கள் 01 ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலவீச்சில் விளைவற்று இருந்தது. | WPKI 0239 ஆம் இலக்க வாகனத்தை திருத்தம் செய்தலானது பொருளாதார ரீதியாக விளைவற்றதாக இருப்பதனால் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை இடம்பெற்று வந்தது. WPJY 9936 ஆம் இலக்க மற்றும் WPKB 0928 ஆம் இலக்க வாகனங்களை திருத்தம் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் திருத்தம் செய்தல் முடிவடைந்ததன் பின்னர் ஓடுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டது. WPKE 5456 மற்றும் WPKR 2300 ஆம் இலக்க வாகனங்கள் இயந்திர பொறியியலாளரின் சிபார்சின் பிரகாரம் திருத்தம் செய்வதற்காக கேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொண்டு முடிவடைந்ததன் பின்னர் ஓடுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | திருத்தம் செய்து பாவனைக்கு எடுப்பதற்கும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத வாகனங்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஏனைய நிறுவனங்களிலிருந்து பொறுப்பேற்கப்பட்டிருந்த ரூபா 21,900,000 மொத்தப் பெறுமதியான 04 வாகனங்களின் உரிமையை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறைப்படியாக | இந்த வாகனங்களை உரிய நிறுவனங்களுக்கு முறைப்படியாக ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பேற்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வணிகப் பெறுமதி ரூபா 5,000,000 தொகையான ஒரு கெப் வாகனமானது 2017 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி 2019 ஆம் ஆண்டில் நீதி அமைச்சிற்கு கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது. அமைச்சிற்கு வாகனங்களை முறைப்படியாக ஒப்படைக்காது இந்த வாகனங்களை பயன் படுத்திய நபர் 2018 ஆம் ஆண்டில் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். விபத்து சம்பந்தமாக 2017 யூன் 07 ஆந் திகதி நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையின் அறிக்கை, பொலிஸ் முறைப்பாட்டின் பிரதி, சாரதியின் விளக்க கூற்று, என்பன கோவையில் இல்லாததுடன் 2021 பெப்ரவரி மாதமளவில் வாகனத்தை திருத்தம் செய்வதற்கு அல்லது விபத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய நபரினை இனங்கண்டு அரசாங்கத்திற்கான நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விபத்து தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் விசாரணைகள் தற்பொழுது இடம்பெற்று வருவதுடன் அந்த விசாரணைச் சபையின் சிபார்சுடன் நி.பி 104(3) இன் பிரகாரமான இறுதி அறிக்கையினைப் பெற்றுக கொண்டதன் பின்னர் நட்டத்தை அறவீடு செய்தல் மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | விசாரணைகள் விரைவாக முடிவுறுத்தப்படுதல் வேண்டும். |

**3.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் நிறுவனத்தின் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இணையத்தளம் உருவாக்கப்பட்டிருந்தும், அந்த இணையத்தளத்தின் மூலம் பொதுமக்களின் தேவைப்பாடுகள், நிறுவனம் தொடர்பான முறைப்பாடு அல்லது பாராட்டுக்களை வெளிப்படுத்துவதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் நிறுவனத்தின் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இணையத்தளம் உருவாக்கப்பட்டிருந்ததுடன் அந்த இணையத்தளத்தின் மூலம் பொதுமக்களின் தேவைப்பாடுகள், நிறுவனம் தொடர்பான முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை வழங்குவதற்காக இணையத்தளத்தை நாளதுவரையாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | உரிய வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2017 இலிருந்து 2020 வரையான காலத்தில் கோவை செய்யப்பட்டிருந்த பதவியணியினர்களின் 93 ஒழுக்காற்று விசாரணைகளில் 2021 மார்ச் மாதம் வரை 52 ஒழுக்காற்று விசாரணைகள் முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் கோவை செய்யப்பட்டு முடிவுறுத்தப்படாத ஒழுக்காற்று விசாரணைகளாகும். | தொடக்க விசாரணைகள் முடிவுறுத்தப்படாத 33 கோவைகள் தொடர்பாக விசாரணைகளை முடிவுறுத்தி அறிக்கைகளை விரைவாகச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்து அனுப்புவதற்கும் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 07 கோவைகள் தொடர்பாகசில சிக்கலின் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையும் வரை அல்லது நீதிமன்றத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வரை 11 கோவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அந்த | ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை விரைவாகப் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறைகளின் பின்னர் கோவைகள் சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (இ) | சர்வதேச வணிக உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய சர்வதேச உடன்பாடுகள் சார்பாக உருவாகும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக வலய ரீதியான ஒரு நிலையமாக இலங்கை சர்வதேச தீர்த்து வைத்தல் நிலையம் உருவாக்கப்பட்டு அது நிரந்தர இடத்தில் ஸ்தாபிக்கப்படும் வரை 2013 ஆம் ஆண்டிலிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு இடத்தில் செயற்படுத்தப்பட்டு வந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது பிணையால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனிக்குத் தேவையான மூலதனத்தை வழங்குவது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்படாமை, பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமை ஆகிய காரணங்களால் அக்கம்பனி செயற்பாடற்றுக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது 2019 யூலையிலிருந்து 2020 திசெம்பர் வரை வாடகையாக ரூபா 41,702,018 தொகையும் நிருவாகச் செலவுகள் ரூபா 64,800 தொகையும் மீளச் செலுத்தும் பாதுகாப்பு வைப்பு ரூபா 273,420 தொகையும் ஆக ரூபா 42,040,238 தொகை செலுத்தப்பட்டிருந்தும் நிலையத்தை தோற்றுவிக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | தற்பொழுது இந்த சர்வதேச தீர்த்து வைத்தல் நிலையம் செயற்பட்டு வருகின்ற வளவு பல்வேறு நிறுவனங்களின் வேண்டுகோளின் அடிப்படையில் நாளாந்த வாடகை அடிப்படையில் வழங்குதல் இடம்பெற்று வருவதுடன் கொழும்பு புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் நிரந்தரமாக அதில் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்த நிருவாகச் செலவினை விரைவாகத் தீர்த்து வைத்து தோற்றுவிக்கும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பதவியணியின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 11 பதவிகளில் 19 உத்தியோகத்தர்களதும் மூன்றாம் மட்டத்திலுள்ள ஒரு பதவியில் இரண்டு உத்தியோகத்தர்களதும் இரண்டாம் மட்டத்திலுள்ள 03 பதவிகளின் 33 உத்தியோகத்தர்களதும் ஆரம்ப மட்டத்திலுள்ள 04 பதவிகளின் 05 ஊழியர்களதும் வெற்றிடங்கள் காணப்பட்டன. | இவ்வெற்றிடங்கள் சம்பந்தமாக உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | அத்தியாவசிய மாகக் காணப்படுகின்ற வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | இணக்க சபை ஆணைக் குழுவில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 பதவிகளில் 161 பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவிக்கு 2017 யூன் 12 ஆந் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கடமையை மேற்கொள்வதற்கு ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். | இவ் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க சேவைகள் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டது. | - மேற்படி - |
| (இ) | தேசிய ஒருங்கிணைந்த பிரிவின் 04 பதவிகளில் 04 பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | 2020 பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் மீளமைப்பு தொடர்பான பிரிவின் பதவியணியினர்களை நீதி அமைச்சின் தேசிய ஒருங்கிணைப்பு பிரிவிற்கும் சிறைச்சாலைகள் முகாமைத்துவ சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சிற்குமிடையே பகிர்ந்து ஒதுக்கீடு செய்யும் போது இவ்வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதுடன் தற்பொழுது அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |